# சுவிஸ் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகம் நடாத்தும் மறை அறிவுப் போட்டிகள் - 2025

### பிரிவு 10 (2010 ம் ஆண்டில் பிறந்தவர்கள் வயது 15)

## விவிலிய வினாவிடைப் போட்டி (சரியான விடையைத் தெரிவு செய்தல், சரியான விடைகளை எழுதுதல்)

1. இதோ கடவுளின் ஆட்டுக்குட்டி என்று யோவான் யாரைப் பார்த்துக் கூறினார்? இயேசுவை
2. கேபா என்பதன் பொருள் என்ன? பாறை
3. உண்மையான இஸ்ராயேலர், கபடற்றவர் என்று இயேசு யாரைப் பார்த்துக் கூறினார்? நத்தனியேல்
4. இயேசு செய்த முதல் அருளடையாளம் என்ன? கானாவூர்த் திருமணத்தில் தண்ணீரை இரசமாக்கினாார்.
5. இயேசு எத்தனை கல்தொட்டிகளில் உள்ள தண்ணீரை இரசமாக மாற்றினார்? ஆறு
6. என் தந்தையின் இல்லத்தை சந்தையாக்காதீர்கள் என்று கூறியவர் யார்? இயேசு
7. கொடிய குத்தகைக்காரர் உவமையை இயேசு தங்களைக் குறித்தே கூறினார் என உணர்ந்து கொண்டவர்கள் யார்? தலைமைக்குருக்களும், பரிசேயர்களும்.
8. எந்தச் சந்தர்ப்பத்தின் போது நம்பிக்கை குன்றியவனே ஏன் பயம் கொண்டாய்" என்று இயேசு பேதுருவிடம் கூறினார்? பெருங்காற்று வீசியதைக் கண்டு அஞ்சி பேதுரு கடலில் மூழ்கும்போது
9. தேவையில் உள்ள மிகச் சிறியோருக்கு உதவிபுரிவோர் இறுதிநாளில் எத்தகைய வாழ்வைப் பெறுவர் என்று இயேசு கூறினார்? நிலை வாழ்வு
10. ஆபிரகாம் முதல் தாவீது வரை தலைமுறைகள் எத்தனை? 14 தலை முறைகள்
11. இம்மானுவேல் என்பதன் பொருள் என்ன? கடவுள் நம்முடன் இருக்கின்றார்.
12. யோசேப்பு எழுந்து குழந்தையையும், அதன் தாயையும் கூட்டிக் கொண்டு இரவில் எங்கே சென்றார்? எகிப்திற்கு
13. ஏரோதிற்குப்பின் யூதேயாவை ஆட்சி செய்த அரசன் யார்? அர்க்கெலா
14. திருமுழுக்கு யோவானின் உடலை யார் அடக்கம் செய்தனர்? திருமுழுக்கு யோவானின் சீடர்கள்
15. இயேசுவைக் கைது செய்தவர்கள் அவரை முதலில் யாரிடம் கூட்டிச் சென்றார்கள்? தலைமைக் குருவிடம்
16. இரவில் இயேசுவிடம் வந்த யூதத்தலைவன் யார்? நிக்கதேம்.
17. ஏராளமான மீன்களைக் கண்ட பேதுரு இயேசுவைப் பார்த்து என்ன கூறினார்? ஆண்டவரே நான் பாவி, நீர் என்னை விட்டுப் போய்விடும்.
18. எலியாவின் காலத்தில் பஞ்சம் உண்டானபோது அவர் யாரிடம் அனுப்பப்பட்டதாக இயேசு கூறினார்? சீதோனைச் சேர்ந்த சாரிபாத்தில் வாழ்ந்த ஒரு கைம்பெண்ணிடம்.
19. அலகை இயேசுவிடம் கல் அப்பமாக மாறும்படி சோதித்தபோது, இயேசு கூறிய பதில் என்ன? ''மனிதன் அப்பத்தினால் மட்டும் வாழ்வதில்லை என மறைநூலில் எழுதியுள்ளதே'' என்றார்.
20. இயேசு தம் சீடர் பன்னிருவரையும் அழைத்து அவர்களுக்கு அளித்த அதிகாரங்கள் எவை? தீய ஆவிகளை ஓட்டவும், நோய்நொடிகளைக் குணமாக்கவும் அதிகாரமளித்தார்.
21. இயேசு கைம்பெண்ணின் மகனை உயிர்த்தெழச்செய்தது எவ்வூரில்? நயீம்
22. இளைஞனே நான் உனக்குச் சொல்லுகின்றேன் எழுந்திடு என்று இயேசு யாரிடம் கூறினார்? நயீர் ஊர்க் கைம்பெண்ணின் மகனுக்கு
23. நான் அவருடைய ஆடையைத் தொட்டாலே நலம் பெறுவேன் என்று கூறியவர் யார்? 12 ஆண்டுகளாய் இரத்தப்போக்கினால் துன்புற்ற பெண்
24. யோனா அறிவித்த செய்தியைக் கேட்டு மனம் மாறியவர்கள் யார்? நினிவே மக்கள்
25. ''என் கண்முன்னே நில்லாதே சாத்தானே'' என்று இயேசு யாருக்கு கூறினார்? பேதுருவுக்கு
26. இயேசு வரியாக செலுத்திய பணத்தின் பெயர் என்ன? திராக்மா

27. மனமாற்றத்தினால் இறைவனிடம் செல்ல வேண்டும் என்பதை உணர்ந்த இயேசு கூறிய உவமை எது? ஊதாரி மைந்தன் உவமை
28. ஊதாரி மைந்தன் உவமையில் பொறுப்பற்று வாழ்ந்து பின் தவறை உணர்ந்து தந்தையிடம் திரும்பி வந்தவர் யார்? இளைய மகன்
29. இயேசுவை சூழ்ச்சியாக பிடித்து கொலை செய்ய ஆலோசித்தவர்கள் யாவர்? கயபா, தலைமைக்குருக்கள், மக்களின் மூப்பர்கள்
30. இயேசு திருமுழுக்கு பெற்ற போது தூய ஆவியார் எவ்வடிவில் தோன்றினார்? புறா
31. கடவுள் நான்காம் நாளில் எதை உருவாக்கினார்? சூரியன், சந்திரன்
32. ஜெருசலேம் தேவாலயம் கட்டிய அரசனின் பெயர் என்ன? சாலமோன்
33. எருசலேம் தேவாலயத்தை கட்ட எத்தனை ஆண்டுகள் ஆனது? 46
34. சாலமோன் கடவுளிடம் எதைக் கேட்டான்? தன் நாட்டையும், மக்களையும் ஆளுவதற்கு தேவையான ஞானத்தை
35. கடவுள் தாவீதுக்கு பிறகு யார் அரசனாவான் என்று சொன்னார்? சாலமோன்
36. சாலமோன் மகன் பெயர் என்ன? ரெகபெயாம்
37. சாலமோன் அரசன் இஸ்ராயேலரை எத்தனை ஆண்டுகள் ஆட்சி செய்தான்? 40
38. எலியா வாழ்ந்த ஊரின் பெயர் என்ன? திஸ்பே
39. எலியா விண்ணகத்துக்கு எப்படி எடுத்துக்கொள்ளப்பட்டார்? சுழல் காற்றின் மூலம்
40. இயேசு யார் இறந்த போது கண்ணீர் விட்டு அழுதார்? லாசர்
41. லாசர் இறந்து எத்தனையாம் நாள் இயேசு அவரை உயிர்பெறச் செய்தார்? 4
42. லாசர் எந்த ஊரைச் சேர்ந்தவர்? பெத்தானியா
43. மரியா இயேசுவுக்கு காலடிகளில் பூசிய தைலத்தின் பெயர் என்ன? இலாமிச்சை
44. யேசு எந்த மலைக்கு சென்று இரத்த வியர்வை சிந்தி செபித்தார்? ஒலிவ மலை
45. விதைப்பவன் உவமையில் விதை எதற்கு ஒப்பிடப்படுகின்றது? இறைவார்த்தைக்கு
46. திருக்குடும்பத்தின் அங்கத்தவர்கள் யாவர்? இயேசு, மரியா, யோசேப்பு
47. திருத்துவத்தின் அங்கத்தவர்கள் யாவர்? கடவுள், இயேசு, தூய ஆவியார்
48. ‘‘பிறஇனத்தாரின் திருத்தூதர்’’ என அழைக்கப்படுபவர் யார்? புனித பவுல்
49. புனித பவுலுக்கு திருமுழுக்கு கொடுத்தவர் யார்? அனனியா
50. விலிலியத்தில் எத்தனை நூல்கள் உண்டு? 73
51. பழைய ஏற்பாட்டு நூல்கள் எத்தனை? 46
52. புதிய ஏற்பாட்டு நூல்கள் எத்தனை? 27
53. திரு அவையின் முதல் மறைசாட்சி யார்? புனித ஸ்தேவான்
54. இயேசுவைக் காட்டிக்கொடுத்த யூதாசுக்குப் பதிலாக தெரிவுசெய்யப்பட்ட திருத்தூதர் யார்? மத்தியா
55. மாற்கு நற்செய்தி யாருக்காக எழுதப்பட்டது? பிறஇனத்துக் கிறிஸ்தவருக்காக எழுதப்பட்டது.
56. மாற்கு நற்செய்தியை மாற்கு எந்த மொழியில் எழுதினார்? கிரேக்க மொழியில்
57. மாற்கு நற்செய்தி எப்பொழுது எழுதப்பட்டது? கி.பி. 64மு. ஆண.டில் இருந்து 70ம் ஆண்டுக்குள்
58. திருமுழுக்கு யோவானிடமிருந்து இயேசு எங்கே திருமுழுக்கு பெற்றார்? யோர்தான் ஆற்றில்.
59. இயேசு திருமுழுக்கு பெற்றவுடன் அவர் தூய ஆவியால் எங்கே அனுப்பப்பட்டார்? பாலை நிலத்துக்கு.
60. இயேசு பாலை நிலத்தில் எத்தனை நாள் இருந்தார்? 40 நாள்.
61. யோவான் கைது செய்யப்பட்டபின் இயேசு கடவுளின் நற்செய்தியை எவ்வாறு பறைசாற்றினார்? ”காலம் நிறைவேறிவிட்டது, இறையாட்சி நெருங்கி வந்து விட்டது. மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்” என்றார்.
62. இயேசு லேவியை அழைக்கும்போது அவர் எங்கே இருந்தார்? சங்கச் சாவடியில் அமர்ந்திருந்தார்.
63. இயேசு சீமோனுக்கு அளித்த வேறு பெயர் என்ன? பேதுறு.
64. ”இடியின் மக்கள்”என அழைக்கப்பட்டவர்கள் யாவர்? செபதேயுவின் மகன் யாக்கோப்பும், அவர் சகோரரான யோவானும்.
65. இயேசு காற்றையும், கடலையும் அடக்கியபோது, அவருடைய சீடர்கள் என்ன கூறினார்கள்? ” காற்றும், கடலும் இவருக்கு கீழ்ப்படிகின்றனவே! இவர் யாரோ?” என்றனர்.

66. கெரசேனர் பகுதியில், தீய ஆவி பிடித்தவர் வாழ்ந்து வந்த இடம் எது? கல்லறைகளே அம்மனிதரின் உறைவிடம்.
67. இரத்தப்போக்கினால் துன்புற்ற பெண்ணின் நம்பிக்கை என்ன? " அவருடைய ஆடையைத் தொட்டாலே நலம் பெறுவேன்" என்று நம்பி இருந்தார்.
68. « தலித்தா கூம்" என்பதன் பொருள் என்ன? «சிறுமி, உனக்கு சொல்லுகிறேன், எழுந்திரு" என்பது பொருள்.
69. திருமுழுக்கு யோவான் ஏரோதிடம் கூறியது என்ன? «உன் சகோதரர் மனைவியை நீ வைத்திருப்பது முறையல்ல" எனக் கூறினார்.
70. திருமுழுக்கு யோவானை கொலை செய்ய திட்டம் தீட்டியது யார்? ஏரோதியாள்.
71. ஏரோதியாள் என்பவர் யார்? ஏரோதின் சகோதரரான பிலிப்பின் மனைவி.
72. ஏரோதியாளின் மகள் பெயர் என்ன? சலோமி.
73. சலோமி ஏரோதிடம் கேட்டது என்ன? திருமுழுக்கு யோவானின் தலையைக் கேட்டார்.
74. ஐந்து அப்பங்களையும், இரண்டு மீன்களையும் கொண்டு எத்தனைபேர் உண்டனர்? ஐயாயிரம் பேர்
75. ஐந்து அப்பங்களையும், இரண்டு மீன்களையும் கொண்டு, வயிறாற உண்டபின்பு எஞ்சியவற்றை எத்தனை கூடைகள் நிறைய எடுத்தனர்? பன்னிரண்டு கூடைகள்.
76. தீர் பகுதியில் இயேசு யாரைக் குணப்படுத்தினார்? ஒரு கிரேக்கபெண், சிரியா தெனிசிய இனத்தைச் சேர்ந்தவர்.
77. காது கேளாதவரிடம் இயேசு கூறியது என்ன? «எப்பத்தா"
78. «எப்பத்தா" என்றால் என்ன? « திறக்கப்படு" என்று பொருள்.
79. இயேசு உருமாறிய பொழுது அங்கே தோன்றிய இருவரது பெயர் என்ன? எலியாவும், மோசேயும் தோன்றினர்.
80. சிறுபிள்ளைகளைக் கண்டு அதட்டிய சீடர்களிடம் இயேசு கூறியது என்ன? " சிறு பிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள், அவர்களைத் தடுக்காதீர்கள். ஏனெனில் இறையாட்சி இத்தகையோருக்கே உரியது.
81. எரிக்கோவில் பார்வை பெற்றவரின் பெயர் என்ன? பார்த்திமேயு
82. இயேசு எவ்வாறு எருசலேமுக்குள் நுழைந்தார்? கழுதைக் குட்டியில் அமர்ந்து வந்தார்.( 11:7)
83. இயேசு யாருடைய வீட்டில் இருந்த போது பெண் ஒருவர் இயேசுவின் பாதங்களைத் தைலத்தால் பூசினார்? இயேசு பெத்தானியாவில் தொழுநோயாளர் சீமோன் இல்லத்தில் இருந்தார்.
84. படைவீரர்கள் இயேசுவின்மேல் உடுத்திய ஆடையின் நிறம் என்ன? செந்நிற ஆடை. (1
85. சிலுவை சுமப்பதில் இயேசுவுக்கு உதவியது யார்? சீரேன் ஊரைச் சேர்ந்த சீமோன் என்பவர்.
86. இயேசு விண்ணேற்றம் அடையும் பொழுது தன்னுடைய 11 சீடர்களுக்கு அவர் கூறியது என்ன? "உலகமெங்கும் சென்று, படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை பறைசாற்றுங்கள். நம்பிக்கை கொண்டு திருமுழுக்குப் பெறுவோர், மீட்புப் பெறுவர்: நம்பிக்கையற்றவரோ தண்டனைத் தீர்ப்புப் பெறுவர்"
87. எதிர்நோக்கின் திருப்பயணிகள் யூபிலி ஆண்டின் சிறப்பு இலட்சனையில் உள்ள சிலுவையை பிடித்திருக்கும் முதலாவது மனிதர் எதனை அடையாளப்படுத்துகின்றது? நம்பிக்கையை
88. எதிர்நோக்கின் திருப்பயணிகள் யூபிலி ஆண்டின் சிறப்பு இலட்சனையில் உள்ள அலைகள் எதனை அடையாளப்படுத்துகின்றது? வாழ்க்கையில் அலைபோல் துன்பம், துயரம் வந்தாலும் நம்பிக்கை எம்மிடமிருந்து ஒருபோதும் எடுபடக்கூடாது என்பதனை.
89. மன்னார் மறைமாவட்ட ஆயரின் ஆயர் இலட்சனையில் உள்ள ஏட்டுச்சுருளில் உள்ள இறைவார்த்தை என்ன? "உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" (லூக் 1:38)
90. மன்னார் மறைமாவட்ட ஆயரின் ஆயர் இலட்சனையில் உள்ள குருத்தோலைகள் எதனை அடையாளப்படுத்துகின்றது? மறைசாட்சியர்கள் விண்ணகத்தில் பெற்ற வெற்றியை

## பேச்சுப்போட்டி

## திரு அவை ஒழுங்குகள்

திரு அவை ஒழுங்குகள் என்பது, கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் பின்பற்றுவதற்காக திரு அவை வழங்கியுள்ள ஆறு விதிமுறைகள் ஆகும். கிறிஸ்தவ வழிபாடு மற்றும் அறநெறி சார்ந்த அடிப்படை ஒழுங்குகளாக இவை அமைந்துள்ளன. தமிழ் மரபில், திரு அவை கட்டளைகள் என்ற பெயராலும் இவை அழைக்கப்படுகின்றன.

கிறிஸ்தவர்கள் தங்களது வாழ்வில் எதிர்நோக்கி, கடைப்பிடிக்க வேண்டிய நம்பிக்கையை போதிப்பது திரு அவையின் கடமையாக உள்ளது. நம்பிக்கையாளர்களின் அறநெறி வாழ்வு, ஓர் ஆன்மிக வழிபாட்டுச் செயலாக மாற திரு அவை உழைக்கிறது. ஆண்டவர் இயேசுவின் வாழ்வை ஒத்ததாக கிறிஸ்தவர்களின் வாழ்வு இருக்கும் போது, உண்மை கடவுள் மீதான நம்பிக்கைக்கு மற்றவர்களையும் ஈர்த்து திரு அவையைக் கட்டியெழுப்ப முடியும். ஆகவே, செப உணர்வு, அருளடையாள வாழ்வு, அறநெறி அர்ப்பணம், இறையன்பு மற்றும் பிறரன்பில் வளர்ச்சி ஆகியவற்றில் தவிர்க்க முடியாத குறைந்த பட்ச உறுதி நிலையை வழங்க திரு அவை ஆறு ஒழுங்குகளை வகுத்து தந்துள்ளது.

**திரு அவை வழங்கியுள்ள ஒழுங்குகள் பின்வருமாறு:**

1. ஞாயிற்றுக்கிழமைகளிலும் கடன் திருநாட்களிலும் திருப்பலியில் பங்கேற்பதுடன், இந்நாட்களின் புனிதத்தைப் பாதிக்கும் வேலைகளையும் செயல்களையும் தவிர்க்க வேண்டும்.
2. ஆண்டுக்கு ஒரு முறையாவது, தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு ஒப்புரவு அருளடையாளம் பெற வேண்டும்.
3. உயிர்ப்புக் காலத்திலாவது நற்கருணை உட்கொள்ள வேண்டும்.
4. திரு அவை குறித்துள்ள நாட்களில் இறைச்சியைத் தவிர்க்கவும், நோன்பு கடைபிடிக்கவும் வேண்டும்.
5. ஒவ்வொருவரும் தம்மால் இயன்ற அளவு திரு அவையின் பொருள்சார் தேவைகளில் உதவி செய்ய வேண்டும்.
6. திருச்சபையின் திருமணக்கட்டுப்பாடுகளைக் கடைப்பிடி

## பாடல் போட்டி (மனப்பாடம் செய்து பாட வேண்டும்.)

அமைதியின் தெய்வமே இறைவா
என் இதயத் தலைவனே
அருள்வாய் அருள்வாய் யாம் ஏங்கித் தேடுகின்ற அமைதி
அமைதி அமைதி எங்கும் என்றும் அமைதி - 2

நீதிப் பாதையில் நடப்பவர் சுவைப்பது அமைதி அமைதி
தியாகச் சிகரத்தில் நிலைப்பவர் பெறுவது அமைதி அமைதி (2)
அன்பு மொழியை விதைத்திடுவோர்
அருளின் பயிரை அறுத்திடுவார் (2)
அமைதி அமைதி எங்கும் என்றும் அமைதி - 2

உறவைத் தேடியே உரிமைகள் காத்தால் அமைதி அமைதி
உயிரை மதித்தால் உண்மையில் நிலைத்தால் அமைதி அமைதி(2)
ஓங்கும் வன்முறை ஒழித்திடுவோம்
வீங்கும் ஆயுதம் களைந்திடுவோம் (2)
அமைதி அமைதி எங்கும் என்றும் அமைதி - 2
அமைதியின் தெய்வமே இறைவா என் இதயத் தலைவனே

## ஓவியப் போட்டிக்கான தலைப்பு

**இயேசுவின் திருமுழுக்கு**